## DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 101/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 6 (L.W6) |
| Name | : Renni Victor |
| Father Name | : Raja Mani |
| Village | : Kattayanvilai, Vettornimadam |
| Taluk | : Agastheswaram |
| Calling | : Wood Work |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2023

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் கட்டயன்விளை வெட்டுர்ணிமடத்தில் குடியிருந்து வருகிறேன். மரவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 27.07.2021 ம் தேதி இரவு 07.00 மணியளவில் நானும் எனது நண்பர் ஸ்டாலின் ஜெபராஜ் என்பவரும் வடசேரி பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருக்கும் போது அங்கு வந்த போலீசார் எங்கள் முன்னிலையில் எதிரி ஆனந்தராஜை கைது செய்தார்கள். அவர் தாமாக முன்வந்து பல சர்ச்களில் காணிக்கை திருடியதை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ஸ்டாலின் ஜெபராஜ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து வேறு வழக்கு சம்பந்தப்பட்ட ரூ.2500 பணத்தை கைப்பற்றினார்கள். இந்த வழக்கில் எதிரி பணத்தை செலவழித்ததாக ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அசா.ஆ.4 ஆகும்.** இது சம்பந்தமாக போலீசார்

என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

நான் 27.07.2021 ம் தேதி 07.00 மணிக்கு வேலை விசயமாக வடசேரி பேருந்து நிலையத்தில் கன்னியாகுமரி போகும் பேருந்து நிறுத்தம் அருகில் நின்றிருந்தேன். சம்பவ இடத்தில் சுமார் 150 க்கு மேற்பட்ட நபர்கள் நின்றிருந்தார்கள். ஆஜர் எதிரியை வடசேரி காவல் துறையினர் தான் கைது செய்தார்கள். ஒப்புதல் வாக்குமூலம் எவ்வாறு எழுதப்பட்டு இருந்தது என்றால், கையால் எழுதப்பட்டிருந்தது. அதில் தான் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக 4, 5 முறை விசாரித்தார்கள். களியங்காடு சி.எஸ்.ஐ சர்ச்சில் வைத்து விசாரித்தார்கள். தேதி சரியாக ஞாபகமில்லை. என்னுடன் கையொப்பம் செய்த ஸ்டாலின் உங்களுக்கு நன்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும். அவர் எங்களுடைய சர்ச்சின் உறுப்பினர்.

நீங்கள் எந்த சர்ச்சில் உறுப்பினர் என்றால், திருட்டு நடைபெற்ற களியங்காடு சர்ச்சில் நான் உறுப்பினர். உங்களுடைய சர்ச்சின் திருட்டு நடைபெற்றது சம்பந்தமாக உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். கேமரா மூலமாக ஆஜர் எதிரி திருடியதை பார்த்தேன். வடசேரி போலீசாரை தவிர்த்து வேறு எந்த போலீசாரும் இந்த வழக்கு சம்பந்தமாக உங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் வடசேரி போலீசாரிடம் வெற்று பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் ஒரு மணிநேரமாக பதிவு செய்தார்கள்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,

பத்மநாபபுரம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C.101/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 7 (L.W7) |
| Name | : Stalin Jebaraj |
| Father Name | : Mathew |
| Village | : Kaliyankadu, Vettornimadam |
| Taluk | : Agastheswaram |
| Calling | : Insurance Agent |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2023

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை-**

நான் களியங்காடு வெட்டூர்ணிமடத்தில் குடியிருந்து வருகிறேன். இன்சூரன்ஸ் ஏஜென்டாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 27.07.2021 ம் தேதி காலை 07.15 மணியளவில் நானும் எனது நண்பர் ரென்னிவிக்டர் என்பவரும் வடசேரி பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருக்கும் போது அங்கு வந்த போலீசார் எங்கள் முன்னிலையில் எதிரியை வடசேரி போலீசார் கைது செய்தார்கள். அப்போது எதிரி பல சர்ச்களில் திருடியதை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ரென்னி விக்டர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகும்.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து பணம் கைப்பற்றினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

நீங்கள் வடசேரி பேருந்து நிலையத்தில் எந்த இடத்தில் சம்பவத்தின் போது

நின்றுகொண்டிருந்தீர்கள் என்றால், நான் திருவனந்தபுரம் செல்லும் பேருந்து நிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்தேன். நீங்கள் சம்பவத்தின் போது என்ன காரணத்திற்காக பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தீர்கள் என்றால், தொழில் விசயமாக நானும் ரென்னிவிக்டர் என்பவரும் நின்றிருந்தோம். நான் என்னுடைய வீட்டிற்கு வருவதற்காக பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்தேன். ரென்னிவிக்டர் என்பவர் உங்களுடைய உறவினர் என்றால் சரியல்ல. எங்களுடைய சர்ச்சின் உறுப்பினர் ஆவார். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை வடசேரி காவல் துறையினர் விசாரித்தார்கள். போலீசார் என்னை அன்றைய தினம் காலையில் 07.30 மணிவாக்கில் விசாரித்தார்கள்.

ஒப்புதல் வாக்குமூலத்தல் உள்ள உங்களுடைய கையொப்பத்தை போலீசார் உங்களிடம் எங்கு வைத்து வாங்கினார்கள் என்றால், எனக்கு சரியாக ஞாபகமில்லை. வடசேரி போலீசார் தவிர்த்து இந்த வழக்கு சம்பந்தமாக வேறு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. உங்களுடைய சர்ச்சின் திருட்டு நடைபெற்றது சம்பந்தமாக உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். கேமரா மூலமாகத்தான் பார்த்தோம். ஆஜர் எதிரக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் வடசேரி போலீசார் கேட்டதற்கிணங்க வெற்று பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் டைப் செய்த பேப்பரில் தான் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த தேதியில் கையொப்பம் செய்தீர்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை, இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் வடசேரி போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,

பத்மநாபபுரம்